செ.வெ.எண் : 375 9/7/2012

# பத்திரிக்கை செய்தி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சென்னை மாவட்டத்தில் கீழ்கண்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மட்டும் 25.07.2012 வரை வரவேற்கப்படுகின்றன.

**நிரப்பப்படவுள்ள காலிப் பணியிடங்கள் மற்றும் ஊதியவிகிதம்**

அங்கன்வாடிப் பணியாளர் - 105 ( 2500 - 5000 தர ஊதியம் ரூ.500 மற்றும் இதரபடிகள்)

அங்கன்வாடிப் உதவியாளர் - 152 (1300 - 3000 தர ஊதியம் ரூ.300 மற்றும் இதரபடிகள்)

**வயது** :

அங்கன்வாடிப் பணியாளர் - 25 - 35 வயது

அங்கன்வாடிப் உதவியாளர் - 20 - 40 வயது

**கல்வித் தகுதி** :

அங்கன்வாடிப் பணியாளர் - பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி

அங்கன்வாடிப் உதவியாளர் - தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

காலியாக உள்ள மையங்கள் மற்றும் இன சுழற்சி குறித்த விவரங்கள் அந்தந்த பகுதியில் உள்ள குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த உள்ளூர் பெண் நபர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அந்தந்த பகுதியில் உள்ள குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். மேலும், உரிய விண்ணப்பங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் இணையதளமான www.icds.tn.nic.in லிருந்தும் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசிநாள் : 25.07.2012 மாலை 5.00 மணிக்குள்**

இது குறித்து விவரம் வேண்டுவோர் அந்தந்த பகுதியிலுள்ள குழந்தை வளர்ச்சித் திட்டஅலுவலர் அல்லது கீழ்கண்ட அலுவலரை அணுகலாம்.

மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த)
2/124 தியாகராயா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை -18

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை -9